பக்கங்கள் நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2023 சித்திரை 04 சனிக்கிழமை (17-04-1993) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர் 140

# செஞ்சிலுவை அதிகாரி கொலையை கண்டித்து நேற்று நகரில் பேரணி!

## பண்டத்தரிப்பில் நடந்தது 'சூறாவளி-2' நடவடிக்கை!

கொழும்பு, ஏப். 17

பண்டத்தரிப்பு பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்றது சூறாவளி — 2 (சுழிசுழங் — 2) இராணுவ நடவடிக்கையாம்.

இந்த இராணுவ நடவடிக்கையில் படையினர் தரப்பில் அதிகாரி ஒருவரும், 4 சிப்பாய்களும் காயமடைந்தனர் என்று கூட்டுப்படைகள் தலைமையகம் நேற்று அறிவித்தது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் இடைக்காடுப் பகுதியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைக்கு ''சூறாவளி — 1'' என்று பெயரிடப்பட்டிருந்தது தெரிந்ததே. (ஒ-எ)

## தமிழக முதலமைச்சரின் பாதுகாப்புக்குத் தனிப்படை

சென்னை, ஏப். 17

தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவுக்கும் அவாது குடும்பத்தவர்களுக்கும் மற்றும் முன்னாள் முதலமைச்சர்கள், அவர்களுடைய குடும்பத்தவர்கள் ஆகியோர்களுக்குய் பாதுகாப்பு வழங்குவதற்குப் பொறுப்பாக தமிழ் நாட்டில் தனிப் பாதுகாப்புப் படை ஒன்று அமைக்கப்பட இருக்கிறது.

இதற்கான பிரேரணை நேற்று தமிழக சட்டசபையில் சமர்ப்பிக்கப்பட்டது.

பயங்கரவாதக் குழுக்கள், இலங்கை போராளிகள் குழுக்கள் ஆகியவற்றையும் நாட்டின் தற்போதைய சூழ்நிலையையும் கருத்திற் கொண்டும்—

தேசவிரோத நடவடிக்கைகளை முறியடிக்கவும் தனிப்படை அமைக்கப்படவிருப்பதாக நேற்று சட்டசபையில் தெரிவிக்கப்பட்டது. உ-க)

### காங்கிரஸுக்கு அழைப்பு:

## கச்சதீவை மீளப் பெறுவதில் இணைந்து செயற்பட வருக!

### சட்டசபையில் ஜெயலலிதா

சென்னை, ஏப், 17

கச்சதீவைத் திரும்பப் பெறுவதில் ஆளும் அ. தி. மு. கவும் காங்கிரஸ் கட்சியும் ஒன்றிணைந்து செயல்படவேண்டும்.

முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா முன்கண்டவாறு தமிழக சட்டசபையில் நேற்று முன்தினம் கோரிக்கை விடுத்தார்.

கச்சதீவை இலங்கையிடம் இருந்து திரும்பப் பெறுவது குறித்து மத்திய அரசு பரிசீலித்து வருவதாக புதுடில்லியிடமிருந்து கிடைத்த பதிலுக்குப் பின்னர் வேறு தகவல் ஏதும் கிடைக்கவில்லை என்றும் அவர் கூறினார், (இ-எ)

## சபாநாயகரின் இரு மகன்கள் எதிர் எதிராகப் போட்டி!

### மேல் மாகாணசபைத் தேர்தலில்

ஸ்ரீலங்கா நாடாளுமன்ற சபாநாயகர் எம். எச். முஹம்மதுவின் இரண்டு மகன்மார் எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலில் எதிர் எதிராகப் போட்டியிடுகின்றனர்.

சபாநாயகரின் மகனும் கொழும்பு மாநகர முன்னாள் மேயருமான ஹுசைன் முஹம்மது மேல் மாகாண சபைக்கான தேர்தலில் ஐ.தே.க பட்டியலில் போட்டியிடுகிறார்.

அவரின் சகோதரரான சாகுல் ஹமீத் முஹம்மது அதே மாகாணத்தில் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் வேட்பாளராகப் போட்டியிடுகிறார்.

அதே பட்டியலில் டாக்டர் எம் சி. எம். கலீலின் மருமகனான ஷா நவாஸும் போட்டியிடுகிறார். டாக்டர் கலீல்

(4ஆம் பக்கம் பார்க்க)

### இம்மாத இறுதிக்குள்

## பல்கலை. அனுமதிக்கான விண்ணப்பம் கோரப்படும்

கொழும்பு, ஏப். 17

1991ஆம் ஆண்டு நடந்த ஜி. சி. ஈ. உயர்தரப் பரீட்சையில் பல்கலைக் கழக அனுமதி பெறத் தகுதி பெற்ற மாணவர்களை பல்கலைக் கழகங்களில் அனுமதிப்பதற்கான விண்ணப்பங்கள் இம்மாதத்திற்குள் கோரவிருக்கின்றன.

1992ஆம் ஆண்டு ஜி சி. ஈ. உயர்தரப் பரீட்சையில் பல்கலைக்கழக அனுமதி பெறத் தகுதி பெற்றவர்களை 1994 ஆம் ஆண்டில் சேர்த்துக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது.

1990 ஆம் ஆண்டில் பொறியியல்துறைக்கு மாணவர்களை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பல்வேறு தொண்டர் நிறுவனங்களின் பணியாளர்கள் அரசுக்கு எதிர்ப்புக்குரல்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 17

யாழ். செஞ்சிலுவைச் சங்க உப தலைவர் திரு. க. புவனேந்திரன் கடமையில் ஈடுபட்டிருந்த சமயம் ஸ்ரீலங்கா விமானப்படையினரால் படுகொலையுண்டமைக்காக ஸ்ரீலங்கா அரசைக் கண்டித்தும் —

இத்தகைய தாக்குதல் சம்பவங்கள் எதிர்காலத்தில் நிகழாமல் தடுப்பதை வலியுறுத்தியும் —

சர்வதேச யுத்த விதிமுறைகள் பேணப்படுவதை உறுதிப்படுத்துமாறு செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவைக் கோரியும் —

நேற்று யாழ். நகரில் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நடத்தப்பட்டது.

நேற்றைய பேரணியில் தொண்டர் அமைப்புக்களான சாரணர், செண் ஜோன்ஸ், முதலுதவிப் படையினர், வழிகாட்டிகள், லயன்ஸ், லியோ, ரோட்டறி, இன்ரரக்ட் கழகங்களைச் சேர்ந்தோர், அரச சார்பற்ற நிறுவனங்களின் தொண்டர்கள், மதசார்பு அமைப்புகளின் பிரதிநிதிகள், சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களான கெயர், போரூட், றெட்பானா, சிறுவர் பாதுகாப்பு நிதியம் என்பனவற்றின் பணியாளர்கள், தொண்டர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

பேரணியில் சென்றவர்கள் ஸ்ரீலங்கா அரசின் அட்டூழியங்களைக் கண்டித்து கோஷங்களை எழுப்பினர். பதாதைகளும், சுலோக அட்டைகளும் தாங்கிச் செல்லப்பட்டன.

நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்றிலில் காலை சுமார் 10.00 மணிக்கு ஆரம்பமான பேரணி கோவில் வீதி வழியாக சென்றது. அச்சமயம் அகதிகளுக்கான ஐ நா. தூதரகப் பணிமனையில் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது

பேரணி தொடர்ந்து நாவலர் வீதி, இராசாவின் தோட்டம் வீதி வழியாகச் சென்று அரசசார்பற்ற நிறுவனங்களின் இணைய அலுவலகத்திலும் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது

அதைத் தொடர்ந்து றக்கா

(4ஆம் பக்கம் பார்க்க)

## 'குமண' வந்து திரும்பியது

யாழ்ப்பாணம், ஏப். 17

கொழும்பில் சிகிச்சை பெற்ற நோயாளர்களுடன் நேற்றுக் காலை 'குமண' கப்பல பருத்தித்துறையை வந்தடைந்தது. பின்னர் மாலையே கொழும்புக்கு சிகிச்சை பெறச் செல்லும் நோயாளர்கள் பலரை ஏற்றிக் கொண்டு 'குமண' திருமலைக்குப் புறப்பட்டது. தபால் பொதிகளும் ஏற்றிச் செல்லப்பட்டன

நாளை மறுதினம் இங்கு வரும் 'குமண'வில் இருந்து பொருள்கள் இறக்கும் வேலைகள் அன்றைய தினம் ஆரம்பமாகும். (ஒ-15-17)

## சர்வதேசப் பிரதிநிதிகள் கொழும்பில் ஆராய்வர்

யாழ்ப்பாணம், ஏப். 17

யாழ். செஞ்சிலுவை அதிகாரி திரு. க. புவனேந்திரன் கொல்லப்பட்ட விவகாரம் குறித்து ஆராயும் பொருட்டு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கங்களின் பிரதிநிதிகள் பலர் கொழும்பில் எதிர்வரும் திங்கட்கிழமை கூடவிருக்கின்றனர்.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு, இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், நோர்வே செஞ்சிலுவைச் சங்கம், செஞ்சிலுவைச் சங்கங்களின் சம்மேளனம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் இக்கூட்டத்தில் பங்கேற்கவிருக்கின்றனர்.

யாழ்ப்பாணத்திற்கு நேற்று வந்த இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க அதிகாரி திரு. தயாளதேவா, இந்த விடயம் தொடர்பாகத் தயாரித்துச் சமர்ப்பிக்கவிருக்கும் அறிக்கை இக்கூட்டத்தில் ஆராயப்படும்.

அதைத் தொடர்ந்து பாது

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டுப்படைகள் தலைமை அலுவலகத்திடம் முறையீடு

கொழும்பு. ஏப். 17

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை உப தலைவர் கே. புவனேந்திரன் கடந்த 10 ஆம் திகதி படையினரின் தாக்குதலில் கொல்லப்பட்ட சம்பவத்தை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு கூட்டுப் படைகள் தலைமையகத்தின் கவனத்துக்குக் கொண்டுவந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக கூட்டுப் படைகள் தலைமையகம் விடுத்த அறிக்கையில்.—

தாக்குதல் சம்பவம் இடம்பெற்ற வேளையில் யாழ். குடாநாட்டில் ''சூறாவளி'' என்ற பெயரிலான ராணுவ நடவடிக்கை இடம்பெற்றுக் கொண்டிருந்தது என்றும்—

[4 ஆம் பக்கம் பார்க்க]

## அன்னை பூபதி நினைவாக எழுச்சிபூர்வ நிகழ்வுகள்

### நாளை மறுதினம் இறுதிநாள்

யாழ்ப்பாணம், ஏப். 17

அன்னை பூபதியின் ஐந்தாம் ஆண்டு நினைவு தினத்தை நாளை மறுதினம் மிகுந்த எழுச்சியுடன் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் குடாநாடு முழுவதிலும் நடைபெற்று வருகின்றன.

நினைவு தினக் கொண்டாட்டத்தின் பிரதான நிகழ்வுகளான உண்ணாவிரதம், சிரமதானம் ஆகியன பெரிய அளவில் நேற்று முன்தினம் ஆரம்பமாகின.

சிரமதான நிகழ்ச்சிகளிலும் மக்கள் உணர்வுபூர்வமாகப் பெரும் எண்ணிக்கையில் பங்குபற்றி வருகின்றனர்.

இன்றைய பிரதான உண்ணாவிரத நிகழ்வு கொடிகாமம் பகுதி மக்களால் சுட்டிபுரம் அம்மன் கோவிலிலும், பளைப் பகுதி மக்களால் புலோப்பளை கல்வி வளர்ச்சிக்கழக மண்டபத்திலும் மற்றும் உடுப்பிட்டி சந்திரப்பிள்ளையார் கோவிலிலும் நடைபெற உள்ளன.

இவற்றை விட கோட்ட மட்டத்திலும், வட்ட மட்டத்திலும், கிராமமட்டத்திலும் பல இடங்களில் உண்ணாவிரத நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளன.

இதேவேளை இன்றைய பிரதான சிரமதான வேலைகள் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் நடைபெற உள்ளன. நல்லூர் வட்ட மக்கள் இந்தச் சிரமதானப் பணியில் கலந்து கொள்வர்.

கடந்த மாதம் 19 ஆம் திகதி பரந்த அளவில் ஆரம்பமான அன்னை பூபதி நினைவு அஞ்சலி நிகழ்ச்சிகள் இப்போது உச்ச கட்டத்தை

[4 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

அழகிய பொமனேரியன் நாய்க்குட்டிகளும், உயர்ரக கறுப்பு அல்சேஷன் நாய்க்குட்டிகளும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல. 48/1, முதலாம் ஒழுங்கை, (மக்ரவல் லேன்,) பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். (25278)

நல்லின சிவப்பு, வெள்ளை 1½ மாதம் நிரம்பிய சேவல், பேட்டுக் கோழிக் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. ந கணேஸ்வரன், இல. 24, நாவலடி லேன், பேச்சியம்மன் கோவிலடி, வண்ணார் பண்ணை. (25270)

நாலு போத்தல் பால் கறக்கக்கூடிய யமுனாப்பாறி ஆடு இரு குட்டிகளுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு; க. மகாலிங்கம், அங்கவப்பாய், இணுவில் கிழக்கு. (25268)

லஹறலைன் பிறவுண் பேட்டு குஞ்சுகள் மொத்தமாகவும், சில்லறையாகவும் உடன் விற்பனைக்குண்டு. "மல்லிகாபதி" சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (6116)

## மணப்பெண் தேவை

யாழ் இந்து, இங்கிலாந்தில் நீண்டகாலமாக படித்துக் கொண்டு வேலை புரிபவருக்கு, இங்கிலாந்தில் அல்லது இலங்கையில் அழகான, சுமாரான உயரமுள்ள, படித்த, செவ்வாய்க் குற்றமுள்ள 26 வயதிற்கு உட்பட்ட மணப்பெண் தேவை. திருமணம் இலங்கையில் செய்து விசாவுடன் அழைத்துச் செல்லப்படுவார். முழுவிவரங்களுடன் விண்ணப்பிக்கவும். இல. 520, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (25257)

## A/L மாதிரி வினாத்தாள்

A/L விஞ்ஞானம், வர்த்தகம், கலை, கணிதம் பிரிவுகளுக்கான அனைத்து பாடங்களுக்கும், மாதிரிப் பயிற்சி வினாத்தாள்கள் ஒவ்வொரு மாதமும் வெளியிடப்படும். விடையளித்துத் தந்தால் திருத்திக் கொடுக்கப்படும். Bond Institutes யாழ்ப்பாணம், (சி-4582)

## புலமைப் பரிசில்

ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள்கள் ஒவ்வொரு மாதத்திலும் 2ஆவது, 4ஆவது ஞாயிற்றுச்கிழமைகளிலும், ஊக்குவிப்புப் பயிற்சி வினாத்தாள்கள் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் வெளியிடப்படும். விடையளித்துத் தந்தால் திருத்தி விடைகளுடன் கொடுக்கப்படும். Bond Institutes 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (சி-4583)

## புலமைப்பரிசில் ஆண்டு-5

வருடா வருடம் சிறந்த பெறுபேற்றைப் பெற்றுத் தரும் நிறுவனத்தால் வெளியிடப்படும் புலமைப் பரிசில் மாதிரி வினாத்தாள் (தமிழ், கணிதம், ஆங்கிலம்) 18-04-93 ஞாயிறு வெளியிடப்படும். விடையளித்து தந்தால் திருத்திக் கொடுக்கப்படும். புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (25240)

## பயிற்சி வினாத்தாள்கள்

ஆண்டுகள் 6ஆம், 7ஆம், 8ஆம், 9ஆம், 10ஆம், 11ஆம் வகுப்புகளுக்கான கணிதம், விஞ்ஞானம், தமிழ், சமூகக் கல்வி, ஆங்கிலப் பாடங்களுக்கான வினாத்தாள்கள் மாதத்தின் இறுதி ஞாயிற்றுக்கிழமைகளில் வெளியிடப்படுகின்றன. விடையளித்துத் தந்தால் திருத்திக் கொடுக்கப்படும். Bond Institutes, யாழ்ப்பாணம். (சி-4584)

---

# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

## 95 கலை, வர்த்தகம்

18 — 04 — 1993 7-15 மணி

பொருளியல் — திரு. கலாகரன்
வர்த்தகம் — திரு. தேவா
கணக்கியல் — திரு. S K பிரபாகரன்
அளவையியல் — திரு. விக்கி

இவ்வருடம் III மட்டுமே ஆரம்பமாகும். அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக் கொள்ளவும்.

(சி-4924)

---

# வாரிவளவு நல்லியக்கச் சபை

*காரைநகர்*

தமிழ் புதுவருட காரை: சிறுவர்கள் கலை நிகழ்ச்சிகளும், மருத்துவம், கலை முகாமைத்துவ பீடங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட காரைநகர் மாணவர்களைப் பாராட்டலும் பரிசளிப்பும் - 1993.

யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் 17-04-1993, 18-04-1993 நடைபெற இருந்த மேற்படி நிகழ்வுகள் தவிர்க்க முடியாத காரணங்களினால் 1993-04-26 திங்கள், 1993-04-27 செவ்வாய் பிற்பகல் 1மணிக்கு பின்போடப்படுகின்றது.

நிர்வாக செயலர்
வாரிவளவு நல்லியக்கச் சபை.

(25281)

---

# 40ஆம் நாள் நினைவஞ்சலி



தாயின் மடியில்: 08 — 02 — 1928

தேவன் அடியில்: 09 — 03 — 1993

## சூசைப்பிள்ளை பிரான்சிஸ் மரியநாயகம்

(ஓய்வுபெற்ற அதிபர்)

அன்பின் திருவுருவே ஆசிரிய நல்மணியே!
என்றும் எம் உள்ளத்தில் இருக்கும் சுடர்விளக்கே
மனைவி, மக்கள், உறவினரை மறக்காத மாமணியே
நோயிலிருக்கையிலும் நோகா வுளம் படைத்தோய்
தூய குழந்தைகளின் நினைவாக வாழ்ந்தவரே
நேயமுடன் எந்நாளும் நினைந்தே உருகுகிறோம்
அன்பு மனம் படைத்தோய் ஆண்டவனார் பொன்னடியில்
இன்புற்றிருந்திடவே எந்நாளும் வேண்டுகிறோம்.

மனைவி - இமெல்டாவும்,
பிள்ளைகளும், உறவினர்களும்.

129/1, பீச் றோட்,
யாழ்ப்பாணம். (25262)

---

# 41ஆம் நாள் நினைவஞ்சலி



மண்ணகம்: 13 — 08 — 1939

விண்ணகம்: 07 — 03 — 1993

## அமரர் கு. விநாயகமூர்த்தி (J.P.)

மிருசுவில் குமாரசுவாமி (J P) விதானையாரின் மூத்த மகனும், எழுதுமட்டுவாள் மருதங்குளப் பிள்ளையார் பக்தனும், இந்தியா, எகிப்து, சவுதி அரேபியா, பிரான்ஸ், சுவிற்ஸர்லாந்து ஆகிய நாடுகளுக்குச் சென்று பல பணிகளாற்றிய சமூகத் தொண்டனுமாகிய கு. விநாயகமூர்த்தியின் ஆத்ம சாந்திக்காக இந்நாளில் பிரார்த்தனை செய்கிறோம்.

"பற்றித் தொடரும் இருவினைப் புண்ணிய பாவமுமே"

- குடும்பத்தினர்.

மிருசுவில் வடக்கு
மிருசுவில். (25260)

---

# குருவாக திருநிலைப்படுத்தல்

யாழ்ப்பாணம், ஏப். 17

அமல மரித்தியாகிகள் சபையைச் சேர்ந்த அருட் சகோதரர் ஏ. பி. அரியநாயகம் இன்று சனி காலை 9 மணிக்கு மருதானை ஆர்ச் பற்றிமா ஆலயத்தில் நடைபெறும் வைபவம் ஒன்றில் திருமலை - மட்டக்களப்பு ஆயர் பேரருட் திரு. கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகையினால் குருவாகத் திருநிலைப் படுத்தப்படுவார்.

வைபவத்தில் யாழ். மறைவட்டத்தைச் சேர்ந்த பல குருமார்களும் பங்குபற்றுவர்.

மிருசுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட அருட் சகோதரர் ஏ. பி. அரியநாயகம் கடந்த பல வருடங்களாகக் கொழும்பு, திருமலை மாவட்டங்களில் இறைபணி ஆற்றி வருகின்றார். (த)

---

# முதலாவது பிறந்த தின வாழ்த்து



## ★ செல்வன் ரஜீவன் ★

சண்டிலிப்பாய் மேற்கைச் சேர்ந்த தேவதாசன் கலைவாணி தம்பதிகளின் செல்வப் புதல்வன் ரஜீவன் தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று (17 - 04 - 93) இல் தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார்.

இவரை அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா (உடுவில்), அம்மம்மா, குலரத்ன பெரியப்பா, றதி அன்ரா, அக்காமார், தங்கை (கனடா), சிறீமாமா, ஜெயந்தி மாமி, சசி பெரியப்பா, கௌரி அன்ரா, அக்காமார், தாஸ் மாமா (இத்தாலி), வரதா மாமா, குமார் சித்தப்பா, குகா அன்ரி (ஹொலண்ட்), தயா அன்ரி (கொழும்பு), சக்திஅன்ரி, தேவிமாமி, மச்சான்மார், மச்சாள்மார் (சண்டிலிப்பாய்), சுப்பிரமணியம் மாமா, தவம் அத்தை, மச்சான், மச்சாள்மார், விமலதாசன் பெரியப்பா, ராணி பெரியம்மா, சண்முகநாதன் மாமா, ராணி அத்தை, மச்சான், மச்சாள், தர்மதாசன் பெரியப்பா, விஜி பெரியம்மா, அக்காமார், அண்ணா, விக்கி மாமா, போகா அத்தை, சிலு சித்தப்பா, நிதி அத்தை மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் இனிதே வாழ வாழ்த்துகின்றார்கள்.

(5883)

---

# இன்னிசை வார்ப்புகள்

இடம்: பண்டாரக்குளம் மருதவளவுப் பிள்ளையார் கோவில் முன்றல்

காலம்: இன்று (17-04-1993) சனிக்கிழமை மாலை 7 மணி முதல்

கோவில் தர்மகர்த்தாக்கள், தொண்டர்கள்
*சார்பில்*

ஈழ நல்லூர் சப்தஸ்வரா இசைக்குழு
*வழங்கும்*

## ★ இன்னிசை வார்ப்புகள் ★

விளம்பர அன்பளிப்பு:
இராசா டீசல் எஞ்ஜினியர்ஸ்,
யாழ்ப்பாணம். (25277)

---

சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி
மத்தியமகா வித்தியாலயம், வேலணை.

# பழைய மாணவர் சங்கம்

எமது கல்லூரியில் 33 வருடம் ஆசிரியராக, அதிபராக சேவையிலிருந்த திரு. பொ. கேதாரநாதன் அவர்கள் ஓய்வுபெற்றுள்ளார். அவரின் சேவையை கௌரவிப்பதற்காக பழைய மாணவர்களின் ஒன்று கூடல் இம்மாதப்பிற்பகுதியில் நடைபெறவுள்ளது. இதில் பங்கு கொள்ள விரும்பும் கல்லூரியின் பழைய மாணவர்கள், பொருளர் திரு. க. நவரெத்தினத்துடன் (இல: 89 கோவில் வீதி, யாழ்ப்பாணம்) தொடர்பு கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

கா. பாலகிருஷ்ணன்,
செயலர்.

(25276)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### அதர்மத்தை அம்பலமாக்குக!

போர் வேளையில் பொது மக்களைக் காக்கும், உயிர் காக்க உதவும் பணியில் ஈடுபட்ட செஞ்சிலுவைச் சங்க அதிகாரியை இடைக்காட்டில் கொலை செய்த ஒரு வாரத்தில்—

மீண்டும் சித்தன்கேணியிலும் சண்டிலிப்பாயிலும் செஞ்சிலுவைத் தொண்டர்களை நோக்கி வானத்திலிருந்து ஸ்ரீலங்கா விமானப்படை தாக்கியிருக்கிறது. இரண்டு இடங்களிலும் தொண்டர்கள் மயிரிழையில் உயிர் தப்பினர். இவை திட்டமிட்ட முறையிலான எச்சரிக்கும் பயமுறுத்தும் தாக்குதல்கள் அன்றி வேறல்ல.

இச்சம்பவங்கள் ஒரு விடயத்தை மிகவும் தெளிவாக்குகின்றன ஸ்ரீலங்காப் படைகள். பொதுமக்களின் குடியிருப்புப் பிரதேசங்களின் மீது தாக்குதல் நடத்தி தமிழ் மக்களைக் கொல்லும்போது அவர்களைக் காப்பாற்றுவதற்கு எவரும் முனையக்கூடாது; உதவக்கூடாது; தொண்டு செய்யக்கூடாது என்று படைகள் கருதுகின்றன. அந்த உயிர்பாதுகாக்கும் முயற்சிக்குத் தடை விதிப்பது போலவே படைகள் நடந்து கொண்டிருக்கின்றன.

யுத்தம் தொடங்கிய ஆரம்பத்தில், இராணுவத் தாக்குதல்கள் நடக்கும் வேளைகளில் மக்களை கோவில்கள், தேவாலயங்கள், பாடசாலைகளுக்குச் சென்று தங்குமாறு கூறிவிட்டுப் படையினர் அவற்றின் மீது குண்டுகள், ஷெல்களை ஏவி அவர்களை கும்பலாகக் கொன்று பிணக்குவியலாக்கினர். இப்போது அதற்கும் மேலாக பாதிக்கப்படும் மக்களுக்கு, உயிருக்குப் போராடும் மக்களுக்கு ஆபத்தில் உடனடியாக உதவும் செஞ்சிலுவைத் தொண்டர்களைக் கொன்று அந்தப் பணியில் ஈடுபட வேண்டாம் என்று எச்சரிக்கின்றனர். உலகம் முழுவதிலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட போரின்போது நிராயுதபாணிகளான பொது மக்களைக் காப்பாற்றும் பணிக்கு தடைவிதிக்க முயல்கின்றனர். இது எந்த வகை சார்ந்த யுத்த தர்மம்?

வடக்கு - கிழக்கில் யுத்தம் தொடங்கிய கடந்த மூன்று வருட காலத்தில் ஸ்ரீலங்காப் படைகள் யுத்த தர்மம் என்ற ஒன்றைப்பற்றிச் சிறிதும் பொருட்படுத்தியதில்லை. சர்வதேச யுத்த வரன்முறைகளுக்கு மதிப்பளித்ததில்லை அவற்றைக் கைக் கொண்டதில்லை.

ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்து, மனிதனைக் கடித்த நாய் போல இப்போது ஆபத்தில் உதவும் தொண்டர் நிறுவன அதிகாரிகள் மீதே கைவைத்து விட்டது ஸ்ரீலங்காப் படை. தமிழர்கள் மீது போக்குவரத்துத் தடை, பொருளாதாரத் தடை விதித்ததுபோல உயிர்க் காப்புத் தடையும் போட முனைகிறது!

இனியும் சர்வதேச தொண்டர் நிறுவனங்கள் படையினரைக் கண்டித்துத் தட்டிக் கேட்காமல் மௌனம் சாதிக்கப் போகின்றனவா? இங்குள்ள சர்வதேச தொண்டர் நிறுவனங்கள் குறிப்பாக செஞ்சிலுவைச் சங்கம் கண்ணிருந்தும குருடாக படையினரின் அத்துமீறிய செயல்களைக் கண்டும் காணாதது போல இருக்குமாயின் அவை தமது கடமையிலிருந்து தவறுவனவாக முடியும். கொழும்பு அரசினதும், ஸ்ரீலங்காப் படையினதும் பக்கம் சார்ந்து அதர்மத்திற்கு உதவுகின்றன என்ற அவப்பெயரைச் சம்பாதிக்கவும் நேரிடும்.

பொஸ்னியாவில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவுப் பொருள்களை ஏற்றிச் சென்ற ஐ.நா. அதிகாரி கொலை செய்யப்பட்டது பெரிய அளவில் உலகப் பிரசித்தப்படுத்தப்பட்டது. ஆயின் யாழ்ப்பாணத்தில் செஞ்சிலுவைத் தொண்டர்கள் கொல்லப்படுவது குறித்து ஏன் உலகுக்கு அறிவிக்கக் கூடாது? ஸ்ரீலங்கா அரசின் யுத்த அதர்மத்தை ஏன் அம்பலப்படுத்தக் கூடாது?

# அரச படையினரின் அத்துமீறல்கள்; உலகத்துக்கு தெரியப்படுத்துங்கள்

## ஜெனிவா செஞ்சிலுவைச் சங்கத்துக்கு மகஜர்

யாழ்ப்பாணம், ஏப். 17

ஜெனீவாப் பிரகடனத்தை மீறும் வகையில் தமிழ்ப் பிரதேசங்களில் இலங்கை அரச படைகள் மேற்கொள்ளும் நடவடிக்கைகளை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு சர்வதேச சமுதாயத்துக்குத் தெரியப்படுத்த வேண்டும்.

யாழ் மாவட்டம் சமூக சேவை நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்கள் — தொண்டர்களின் சம்மேளனம் செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக் குழுவின் யாழ் வதிவிடப் பிரதிநிதி ஊடாகச் ஜெனிவாவில் உள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துக்கு அனுப்பிய மகஜரில் மேற்கண்டவாறு கோரப்பட்டுள்ளது.

யாழ் செஞ்சிலுவைச் சங்க உப தலைவர் திரு. புவனேந்திரன் கடமையில ஈடுபட்டிருந்த சமயம் ஸ்ரீலங்காப் படையினரால் கொல்லப்பட்டது தொடர்பாக நேற்று யாழ். நகரில் இடம் பெற்ற கண்டனப் பேரணியின்போது இந்த மகஜர் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் யாழ். வதிவிடப் பிரதிநிதியிடம் ஒப்படைக்கப்பட்டது.

மகஜரின் பிரதிகள் யாழ் அரச அதிபர் ஊடாக ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசவுக்கும் —

யாழ் அரச சார்பற்ற நிறுவனங்களின் ஊடாக கொழும்பில் உள்ள அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியத்துக்கும்—

இலங்கை ஐ. நா. ஸ்தானிகராலய வதிவிடப்பிரதிநிதிக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

மகஜரில தெரிவிக்கப்பட்டிருப்பதாவது.

10-04-93 இல் இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையின் உப தலைவர் திரு. க. புவனேந்திரன் அடையாளங் காணப்படும் கொல்லப்பட்டுள்ளார். இச் சம்பவம் சர்வதேச மனித நேய சட்டத்தை மீறிய ஒரு செயல் என்பது மிகவும் தெளிவானது என்பதையும் சுட்டிக் காட்ட விரும்புகின்றோம்.

எமது சம்மேளனத்தின் சார்பில் சர்வதேச மனித நேய சட்டத்தின் ஜெனீவாப் பிரகடனங்களிலும் அதன் இணைப்புகளிலும் காணப்படும் பின்வரும் பிரிவுகளை தங்கள் கவனத்துக்குக் கொண்டு வருகிறோம்.

(அ) ஆயுதப் போராட்டம் நடைபெறும் சமயங்களில் மருத்துவ, சமய ஆளுனர்களுக்கு அவர்கள் சார்ந்துள்ள ஸ்தாபனங்களால் இலட்சினையை உபயோகிப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. மருத்துவப் பிரிவுகளுக்கும் நிறுவனங்களுக்கும் மருத்துவ போக்குவரத்துச் சாதனங்கள், உபகரணங்கள், பொருள்கள் முதலியவற்றிற்கும் இது பொருந்தும். இச் சந்தர்ப்பங்களில் இது ஒரு பாதுகாப்புச் சின்னமாக அமைகின்றது. இச் சின்னத்தைக் கொண்டுள்ள ஆட்கள், அல்லது இலக்குகள் தாக்கப்படக் கூடாது. மாறாக இவை மதிக்கப்பட்டு பாதுகாக்கப்பட வேண்டும்.

[ஆ] போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களின் கடமைகளுடன் இவர்களால் மதிக்கப்பட வேண்டிய மருத்துவ ஆளுனர்களின் பாதுகாப்பு உரிமை இணைந்துள்ளது. இதே போல சேவை தேவைப்படும் இடங்களுக்குச் செல்லும் உரிமை, போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் மருத்துவ ஆளுனர்களை அவ்விடங்களுக்குச் செல்ல அனுமதிக்கும் கடமையுடன் இணைந்துள்ளது.

இ) ஆயுதப் போராட்டத்தினால் பாதிக்கப்படவர்களுடைய பாதுகாப்பையும் மதிப்பையும் உத்தரவாதப்படுத்துவதற்கான தேவைக்காலத்திலிருந்து இயற்கையாக வந்த பிரதிபலிப்புத்தான் மருத்துவ ஆளுனர்களுக்குரிய பாதுகாப்பு உரிமையே அல்லாது அவர்களுக்கு வழங்கப்பட்ட தனிப்பட்ட சலுகை அல்ல. மருத்துவ ஆளுனர்களுக்குரிய பாதுகாப்பு அவர்களுக்கென குறித்து ஒதுக்கப்பட்ட மனிதாபிமான சேவைகளை செயலாற்றும் பொழுது மட்டுமே அவர்களுக்கு ஏற்புடையதாகும்.

(ஈ) 1977 ஆம் ஆண்டு ஜெனீவா பிரகடனத்துடன் சேர்க்கப்பட்ட இணைப்பின் பாதுகாப்பு சின்னத்தை அடையாளம் காணக்கூடியவாறு தெரியப்படுத்தும் முறை பற்றி விசேடமான முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. மோதல் நடைபெறும் இடங்களிலோ அல்லது இடம் பெறக் கூடியதெனக் கருதும் இடங்களிலோ பாதுகாப்பு உரிமையைப் பெற உரித்துடைய மருத்துவ ஆளுனர்கள் அனைவரும் அடையாளச் சின்னத்தை நன்றாக தெரியக் கூடிய வகையில் அணிந்திருத்தல் பற்றி விரிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. உதாரணமாக அவர்களின் நெஞ்சிலும், முதுகிலும் தெரியக் கூடிய வகையில் பெரிய செஞ்சிலுவைக் குறியை அணிந்திருத்தல் வேண்டும்.

1977 ஆம் ஆண்டு சேர்க்கப்பட்ட இணைப்பு ஒன்றில் பொதுமக்கள் பாதுகாப்பு நிறுவனங்களின் உறுப்பினர்களுக்கான புதிய பாதுகாப்பு சின்னம் பற்றி விபரிக்கப்பட்டுள்ளது. ஓரேஞ்சு நிற பின்னணியைக் கொண்ட முக்கோண வடிவிலான நீலநிற சின்னத்தை உபயோகிக்க வேண்டும்.

(உ) மருத்துவ போக்குவரத்து சாதனங்கள் மதிக்கப்பட்டு பாதுகாக்கப்பட வேண்டும். அவைகளை மதிப்பது என்பது அவைகளை தாக்காது சேதப்படுத்தாது அவைகள் செல்லும் பாதையை தடுக்காது இருப்பதாகும். அதாவது அவைக்கு என ஒதுக்கப்பட்ட சேவைகளை இடைஞ்சல் இன்றி செய்வதற்கு அனுமதிப்பதாகும்.

### மீறல்கள் பாரிய குற்றம்

சர்வதேச சட்டம் பழிவாங்கலை சில சந்தர்ப்பங்களில் பொறுத்துக் கொள்ளுகிற போதிலும் சர்வதேச மனிதாபிமான சட்டம் பாதுகாப்பு வழங்கும் ஆட்களுக்கோ, இலக்குகளுக்கோ எதிராக எவ்வித பழிவாங்கலையும் ஆணித்தரமாக தடுக்கிறது.

சர்வதேச மனிதாபிமான சட்ட விதிகளை மீறும் செயல்கள் அனைத்தும் அச் சட்டத்தை மீறுவதாகவே அமையும். ஆகையால் ஜெனீவா பிரகடனத்தை ஏற்றுக் கொண்டுள்ள அரசு அவ்வாறான மீறல்களை முடிவுக்குக் கொண்டு வர வேண்டிய கடப்பாடு உள்ளதாகும்.

சர்வதேச மனிதாபிமான சட்டம் சில மீறல்களை பாரிய குற்றமாக வகுத்துள்ளது. இவ்வகையான குற்றங்களை இச் சட்டம் முடிவுக்கு கொண்டு வர வேண்டுமென கோருவது மட்டுமல்லாமல் இவ்வாறான குற்றங்களுக்கு தண்டனை வழங்கப்பட வேண்டும் எனவும் குறிப்பிடுகிறது. இச் சட்டத்தால் பாதுகாப்பு வழங்கப்படும் ஆளுக்கோ, அல்லது இலக்குக்கோ எதிராக தெரிந்தும் புரியப்படும் கொலை சர்வதேச மனிதநேய சட்டத்தின் பாரிய மீறல் குற்றமாகவே கருதப்படும்.

ஜெனீவா பிரகடனத்திலும் அதன் மேலதிக இணைப்புகளிலும் குறிக்கப்பட்ட பிரிவுகளை முழுமையாக கடைப்பிடிப்பதும் வலுவாக அமுல் செய்வதும் அரசுகளின் பொறுப்பாகும்.

ஆகவே இலங்கை ஆட்சியாளர்களின் இந்த கொடூரமான செயலை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். சர்வதேச மனிதாபிமான சட்டத்தில் அடங்கியுள்ள தத்துவங்களை இலங்கையின் அரசு இயந்திரம் உண்மையான முறையில் செயற்படுத்துவதை தாங்கள் உறுதிப்படுத்த வேண்டுமென கேட்டுக்கொள்ளுகிறோம்.

தமிழ் பிரதேசத்தில் இலங்கை அரசின் படைகளால் ஜெனீவா பிரகடனத்தை மீறும் செயல்களை சர்வதேச சமுதாயத்திற்கு தெரியப்படுத்துமாறு தங்களை கேட்டுக்கொள்ளுகிறோம்.

இப்படி மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## இன்று

திருநாவுக்கரசு நாயனார் குருபூசை இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு வண்ணார் பண்ணை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும்.

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையால் ஒழுங்கு செய்யப்பட்ட குருபூசையில் திருநாவுக்கரசு நாயனார் புராண படனம், திருமுறை ஓதுதல், உபந்நியாசம் என்பனவும் இடம்பெறும். நண்பகல் கைதடி சைவச் சிறுவர் இல்லத்தில் மகேசுர பூசை நடைபெறும். (க)

o o o

யாழ் பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகின் 'சுகவாழ்வு' விரிவுரைத் தொடரின் மூன்றாவது அமர்வு இன்று சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை நடைபெறும்.

சமூக மருத்துவத்துறைத் தலைவர் பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம் ''சுகாதாரக் குறிகாட்டிகள்'' என்னும் பொருளிலும், வைத்திய கலாநிதி பி. ஆர். சிர்மாறன் ''நீரால் பரவும் நோய்கள்—நெருப்புக்காய்ச்சல், வயிற்றோட்டம் செங்கண்மாரி'' என்னும் பொருளிலும் கருத்துரை வழங்குவார்கள். (த-111)

o o o

யாழ்ப்பாணம் ஏப் 17

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ நாராயணா கிராம அபிவிருத்திச் சங்கம், சனசமூக நிலையம், மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகம் ஆகியவற்றினது 41 ஆவது ஆண்டு விழாவை ஒட்டிய நிகழ்ச்சிகள் கடந்த வருடப்பிறப்பு தினம் முதல் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

நான்காம் நாள் நிகழ்ச்சிகள் இன்று இரவு 7 மணிக்கு நிலைய விளையாட்டுத் திடலில் — அமரர் க. கதிரேசு அரங்கில் நடைபெறும்.

நாளை இறுதிநாள் பொதுக்கூட்டம் [illegible] நடைபெறும். (உ)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ் நகர் ஐங்கரன் விளையாட்டுக் கழகம் ''செற் அப்'' முறையில் நடத்தும் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி இன்று பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாகும்.

லீக் முறையில் நடத்தப்படும் இச்சுற்றுப் போட்டியில் இன்று மாலை முதலாவது ஆட்டத்தில் ஐங்கரன் அணியை எதிர்த்து ஆவரங்கால் ''பி'' அணியும்—

இரண்டாது ஆட்டத்தில் ஆவரங்கால் ''ஏ'' அணியை எதிர்த்து மோகனதாஸ் ''ஏ'' அணியும் மோதும்.

மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் 2-30 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் பைங்கரன் வி. க. அணியை எதிர்த்து யுபிட்டர் வி. க. அணி மோதும்

யாழ் ஆஸ்பத்திரி வீதி அடைக்கலமாதா கோயிலுக்கு முன்னால் உள்ள ஐங்கரன் விளையாட்டுக் கழக மைதானத்தில் இந்த ஆட்டங்கள் நடைபெறும்.

★ ★ ★

சுன்னாகம் ஸ்கந்தா ஐக்கிய விளையாட்டுக் கழகம் ஸ்கந்தா மைதானத்தில் நடத்தி வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று மாலை நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் கழக அணிகள் வருமாறு:-

★ மல்லாகம் ''ஜொலி போய்ஸ்'' அணி எதிர் காங்கேசன் யங்ஹேபல் வி. க. அணி

★ அளவெட்டி விநாயகர் அணி எதிர் இளவாலை யங் ஹென்றீஸ் அணி. (உ-89)

## நாளை

மயிலணி ஏப் 17

மானிப்பாய் சத்ய சாயி நிலையம் நடத்தும் யோகாசனச் செய்முறை விளக்க நிகழ்வு நாளை பிற்பகல் 3 மணிக்கு நிலைய மண்டபத்தில் நடைபெறும்.

தொழிலதிபர் திரு க. கனகராசா யோகாசனக் கலாநிதி சுவாமி ஸ்ரீ சிதானந்த சரஸ்வதி யோகி, யோகி துரைராசா ஆகியோரும் மற்றும் யோகாசன நிபுணர்களும் உரையாற்றுவர் (உ-89)

## அனுதாப செய்திகள்

யாழ்ப்பாணம், ஏப் 17

யாழ் செஞ்சிலுவை உப-தலைவர் திரு க. புவனேந்திரனின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்து சர்வதேச செஞ்சிலுவை அமைப்புக்கள் யாழ் செஞ்சிலுவைச் சங்கத்துக்கு அனுதாபச் செய்திகளை அனுப்பியுள்ளன.

செஞ்சிலுவைச் சங்கங்களின் சம்மேளன பிரதிநிதி திரு சௌத்திரி (இந்திய அமைதிப் படையில் கடமையாற்றியவர்) இலங்கை செஞ்சிலுவைச் சங்க தலைவர் திரு அபயசிங்க, மற்றும் நோர்வே செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி ஆகியோர் அனுதாபச் செய்திகளை அனுப்பிவைத்துள்ளன. (ஒ-3)

## அஞ்சலிக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப் 17

செஞ்சிலுவைச் சங்கத்தின் பருத்தித்துறை பிரிவினர் அமரர் க. புவனேந்திரனுக்கு அஞ்சலி செலுத்தும் கூட்டம் ஒன்றுக்கு ஏற்பாடு செய்துள்ளனர்.

நாளை ஞாயிறு பிற்பகல் 3மணிக்கு வட இந்து மகளிர் கல்லூரியில் பேராசிரியர் வி. க. கணேசலிங்கம் தலைமையில் அஞ்சலிக் கூட்டம் நடைபெறும். (ஒ)

## றோட்டரி நிறுவுநர் ஞாபகார்த்த தபாலுறை

யாழ்ப்பாணம், ஏப் 17

றோட்டரிக் கழகத்தின் நிறுவுநர் போல். பி. ஹரிஸ் அவர்களின் 125 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு ஸ்ரீலங்கா முத்திரைப் பணியகம் ஞாபகார்த்த தபால் உறை ஒன்றை வெளியிடுகிறது.

இந்த விசேட தபாலுறை நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9-30 மணிக்கு யாழ் இந்துக் கல்லூரியில் அமைக்கப்படும் முகாம் தபாலகத்தில் வைத்து வெளியிடப்படும்.

வட பிராந்திய பிரதி அஞ்சல் அதிபர் நாயகம் திரு. எஸ். எம் சேதுகாவலர் விசேட தபாலுறையை வெளியிட்டு வைப்பார். (அ)

## ஓய்வூதியம்

யாழ்ப்பாணம், ஏப். 17

மார்ச், ஏப்ரல் மாதத்துக்குரிய ரயில்வேப் பகுதி ஓய்வூதியம் நாளை மறுதினம் யாழ் இலங்கை வங்கி மேற்தரக் கிளையில் பணமாக வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## 22 பேர் பலி!

புத்தாண்டு தினத்தை ஒட்டி தென்பகுதியில் இடம்பெற்ற கொண்டாட்டங்கள் மற்றும் சூதாட்டங்கள் காரணமாக ஏற்பட்ட மோதல்களில் வெவ்வேறு இடங்களில் 22 பேர் வரை உயிரிழந்தனர் என்றும் — சுமார் 200 பேர் காயமடைந்தனர் என்றும் செய்திகள் தெரிவித்தன.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## இணைந்த பல்கலை கல்லூரிக்கான விண்ணப்பப் படிவங்கள் அனுப்பி வைக்கப்பட்டன

யாழ்ப்பாணம், ஏப் 17

வவுனியாவில் இயங்கும் இணைக்கப்பட்ட பல்கலைக் கழக கல்லூரியில் சேருவதற்கான விண்ணப்பங்களைக் கோரி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு கடிதம் அனுப்பியவர்களுக்கான படிவங்கள் நேற்று முன்தினம் அனுப்பி வைக்கப் பட்டன என்றும் —

உடனடியாக அவற்றை நிரப்பி யாழ் பல்கலைக்கழகப் பதிவாளரிடம் சேர்க்க வேண்டும் என்றும் —

வடமாகாண இணைந்த பல்கலைக்கழகங்களின் பணிப்பாளர் கலாநிதி எஸ். மோகனதாஸ் கேட்டுள்ளார்.

கொழும்பிலிருந்து எடுத்து வரப்பட்ட படிவங்களே தபாலில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் —

விண்ணப்ப திகதி முடிவடைந்த போதிலும் அவற்றை யாழ். பல்கலைக் கழகப் பதிவாளரிடம் சேர்ப்பிக்கலாம் என்றும் அவர் சொன்னார்.

இக்கல்லூரியில் சேர இதுவரை 460 பேர் விண்ணப்பித்துள்ளனர். (த-3)

## தந்தையின் கொலைக்கு மகன் மீது சந்தேகம்

கல்வெட்டித்துறை, ஏப். 17

ஆதிகோவிலடி வாசியான ஐயாத்துரை நித்தியானந்தன் என்பவரின் கொலை சம்பந்தமாக அவரது இருபது வயது மகனான நித்தியானந்தன் ஸ்ரீகுமார் (20 வயது) சந்தேகத்தின் மீது கைது செய்யப்பட்டார்

அவரை விசாரித்ததில் இருந்து மேலும் மூவர் கொலைக்கு உடந்தையாக இருந்தார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டனர்.

நித்தியானந்தன் கமலா தேவி 39 வயது கொலையுண்டவரின் மனைவி மற்றும் அழகராஜா, ஆத்மரூப ஆதிலிங்கம் ஆகிய மூவருமே கைது செய்யப்பட்ட ஏனைய மூவரும் ஆவர்.

வல்வை காவல்துறையின் பதில் பொறுப்பாளர் செல்வி சோ வசந்தமலரும் அவரது குழுவினரும் நேரில் மேற்கொண்ட தீவிர புலன் விசாரணையைத் தொடர்ந்தே நான்கு சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டனர். (அ-155)


யாழ். பல்கலைக்கழக

தொழிலாளர் பதவி (தரம் III)

02-05-1993இல் நடைபெறவுள்ள இப்பதவிக்கான போட்டிப் பரீட்சைக்குரிய

விசேட பயிற்சி வகுப்புகள்

ஆரம்பம்:- 18 - 04 - 1993

பி. ப. 2. 00 மணி

பாடநெறி: பொதுஉளச்சார்பு

★ தொடர்ந்து 10 நாட்கள் (நாளாந்தம் 2 மணித்தியாலங்கள்)
★ அச்சடித்தபாடக் குறிப்புகள்.
★ நாளாந்தக் கட்டணம் ரூபா 25 மட்டுமே.

அஸ்ரன் கல்வி நிறுவனம்

101/10, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(மக்கள் வங்கிக்கு அருகாமையில்)

(சி-4926)


## ஆய்வுக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப் 17

கடந்த வருட இறுதியில் நடத்தப்பட்ட தமிழீழப் பொதுக்கல்வித் தேர்வு குறித்து தமிழீழ கல்விக் கழகம் ஆய்வு ஒன்றை நடத்தவுள்ளது.

இது சம்பந்தமான சந்திப்பு இன்று சனி காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாணம், வேலணைக் கோட்டங்களுக்கு தமிழீழக் கல்விக் கழக அலுவலகத்திலும் —

நாளை ஞாயிறு காலை 9.30 மணிக்கு மருதனார் மடம், பண்டத்தரிப்புக் கோட்டங்களுக்கு இராமநாதன் கல்லூரியிலும் நடைபெறும் (ஒ)

## இராணுவ ஒத்திகை

வாஷிங்டன், ஏப். 17

அமெரிக்காவும் ரஷ்யாவும் கூட்டு இராணுவ ஒத்திகை ஒன்றை நடத்தவுள்ளன

இரண்டாவது உலக மகா யுத்தத்தின் பின்னர் இரு நாடுகளும் கூட்டு இராணுவ ஒத்திகையில் ஈடுபடவிருப்பது இதுவே முதல் தடவை என்று தெரிவிக்கப்படுகிறது

எதிர்வரும் திங்கட்கிழமை அமெரிக்க யுத்த விமானங்கள் வடக்கு சைபீரியா ஆழ்கடலின் மீதாக யுத்த ஒத்திகையில் ஈடுபடும் என்று அறிவிக்கப்படுகிறது. (த-எ)

### பல்கலை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அனுமதிப்பது தொடர்பாக உயர்நீதி மன்றம் அளித்த தீர்ப்பை அடுத்து 1990ஆம் ஆண்டின் பொறியியல் மாணவர் பிரிவு மீளமைக்கப் படவுள்ளது.

இதுவும் இம்மாத இறுதிக்குள் பூர்த்தியாக்கப்படும் என அறிவிக்கப்படுகின்றது. (த-எ)

### சபாநாயகரின்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஐ. தே. கவின் தவிசாளர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஐக்கிய தேசியக் கட்சியின் இரு சிரேஷ்ட தலைவர்களின் நெருங்கிய உறவினர்களான இவர்களை தமது கட்சியின் சார்பில் போட்டியிட நிறுத்தும் விஷயத்தை முன்னணியின் தலைவர்களான முன்னாள் அமைச்சர்கள் லலித் அத்துலத் முதலியும் காமினி திஸநாயக்காவும் கடைசி நிமிடம்வரை மிக இரகசியமாக வைத்திருந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

## நெவில் பெர்னாண்டோ அரசியலிலிருந்து ஓய்வு!

அரசியலில் இருந்து ஓய்வு பெறப்போவதாக களுத்துறை மாவட்ட சுதந்திரக் கட்சி எம். பியான டாக்டர் நெவில் பெர்னாண்டோ அறிவித்திருக்கிறார்.

சுதந்திரக் கட்சிப் பொதுச் செயலாளர் தர்மசிறி சேனநாயக்காவுக்கு எழுதிய கடிதம் ஒன்றில் அவர் இதனைத் தெரிவித்தார்.

எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் சுதந்திரக் கட்சி வேட்பாளர்களை தெரிவு செய்த முறை குறித்துத் தாம் ஏமாற்றம் அடைந்திருப்பதாக தெரிவித்த டாக்டர் பெர்னாண்டோ, தற்போதைய நாடாளுமன்றத்தின் ஆயுள் காலம் முடிவடைந்த பின்னர் தாம் அரசியலைத் துறக்கப் போவதாகவும் அவர் தமது கடிதத்தில் தெரிவித்திருக்கிறார்

முன்னர் ஐ.தே கட்சியின் பாணாந்துறை எம். பியாக இருந்த நெவில் பெர்னாண்டோ, இனவாதம்கக்கும் பேச்சுக்களை நாடாளுமன்றத்தில் நிகழ்த்தி மிகவும் பரபரப்பை ஏற்படுத்தி வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## அரிசி மூடையுடன் சைக்கிள் அபேஸ்

அரிசி மூடையை சைக்கிளில் கட்டி வைத்து விட்டு, கடைக்குள் சென்று திரும்பிய சில நிமிடங்களில், சைக்கிள் மாயமாய் மறைந்துவிட்டது

சைக்கிளுடன் அரிசி மூடையையும் அபகரித்து சென்ற சம்பவம் நேற்று நண்பகல் யாழ் நகரில் நவீன சந்தைக்கு முன்னால் இடம்பெற்றது. [ஒ-15]

## அன்பளிப்பு

வட பிராந்திய லயன்ஸ் கழகம் பூதவுடல் கொண்டு செல்லும் உந்து இழுவை வண்டி ஒன்றை பொது மக்களின் நலன் கருதி யாழ். ஆஸ்பத்திரி நோயாளர் நலன்புரிச் சங்கத்திற்கு நாளை அன்பளிப்புச் செய்யவிருக்கிறது

நாளை காலை 9 மணிக்கு யாழ் ஞானம்ஸ் ஹோட்டலில் நடைபெறும் வட பிராந்திய லயன்ஸ் கழகத்தின் வருடாந்த மாநாட்டின் ஓரங்கமாக இந்த அன்பளிப்பு வழங்கப்படுகிறது. (உ)

### கூட்டுப்படைகள்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்தது என்றும்—

மோதல்கள் இடம்பெற்ற வேளையில் துப்பாக்கிச் சண்டைக்கு மத்தியில் அகப்பட்டுக் கொண்ட செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை உபதலைவர் காயங்களுக்குள்ளாகி இருக்கலாம் என்றும்—

ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்த வேளையில் அவர் அப்பிரதேசத்தில் சென்று கொண்டிருந்தமை மிகவும் துரதிஷ்டவசமான ஒரு விஷயமாகும் என்றும்—தெரிவிக்கப்பட்டுள்ளதாம்.

### சர்வதேசப்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

காப்பு அமைச்சு அதிகாரிகளுடன் அவர்கள் பேசவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் யாழ்ப்பாணம் வந்திருந்த இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க அதிகாரியான திரு தயாளதேவா யாழ். செஞ்சிலுவைச் சங்க அதிகாரி படுகொலையுண்ட சம்பவம் தொடர்பான தகவல்களையும், விவரங்களையும் சேகரித்துச் சென்றுள்ளார்.

அவர் கொழும்பு திரும்பு முன்னர் சம்பவம் நடந்த இடத்தையும் நேரில் பார்வையிட்டார் (ஒ 3)

## ஜனாதிபதி நாடு திரும்பினார்

கொழும்பு. ஏப். 17

பங்களாதேஷ் மற்றும் இந்திய விஜயத்தை முடித்துக் கொண்டு ஜனாதிபதி பிரேமதாஸா நேற்று முன்தினம் மாலை கொழும்பு திரும்பினார். (இ-எ)

## பலாலியிலிருந்து ஷெல் தாக்குதல்!

சுழிபுரம், ஏப். 17

வலிகாமம் மேற்குப் பகுதிகளை நோக்கி நேற்றுமுன்தினம் வியாழன் இரவு பலாலி முகாமில் இருந்து ஆட்டிலறி ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது.

அன்றைய தினம் இரவு 8 மணியளவில் பனிப்புலம், சுழிபுரம் காட்டுப்புலம் பகுதிகளிலும் ஷெல் குண்டுகள் விழுந்து வெடித்தன.

இப்பிரதேசத்தில் நேற்று முன்தினம் காலை முதல் பிற்பகல் 3-30 மணி வரை ஸ்ரீலங்காப் படையினர் விமானத் தாக்குதல்களையும், ஷெல் வீச்சுக்களையும் நடத்தினர் என்பதும் தெரிந்ததே. (ஒ-28)

### செஞ்சிலுவை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வீதி வழியாக பேரணி சென்ற சமயம் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அலுவலகத்திலும் மகஜர் கையளிக்கப் பட்டது.

அங்கிருந்து கோவில் வீதி, கண்டி வீதியூடாக செயலகத்தை அடைந்த பேரணியினர் அங்கு அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகரிடம் மகஜரைக் கையளித்தனர்.

பேரணியில் செஞ்சிலுவைத் தொண்டர்கள் முதலில் தீபம் ஏந்திச் சென்றனர். அவர்களைத் தொடர்ந்து சென்: ஜோன்ஸ் அம்புலன்ஸ் படை, சாரணர்கள், தொண்டு நிறுவனங்களைச் சேர்ந்த தொண்டர்கள் பலரும் சீருடையில் சென்றனர்.

(ஒ-3-1 -111-17-143)

### அன்னை பூபதி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அடைந்து வருகின்றன.

ஆரம்பத்தில் அமைக்கப் பட்ட நினைவுப் பந்தல்கள் யாவும் புதுமெருகூட்டப்படுகின்றன. ஒழுங்கைகள். வீடுகள் தோறும் அன்னை பூபதியின் உருவப் படங்களைக் கொண்ட சிறிய குடில்கள் புதிதாக அமைக்கப்பட்டு வருகின்றன, (அ-த-117)


## நினைவு அஞ்சலி





மாசிலாமணி பரமேஸ்வரி

மலர்வு: 25 — 10 — 1937
உதிர்வு: 17 — 04 — 1992

மாசிலாமணி கருணாகரன் [சாமி]

மலர்வு: 25 — 11 — 1961
உதிர்வு: 19 — 05 — 1986

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்;

— குடும்பத்தினர்

6 ஆம் வட்டாரம்,
மண்டைதீவு.

(25282)



## மரண அறிவித்தல்

### குமாரு குழந்தைவேலு

சரவணை கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், கொக்குவில் பிரம்படி ஒழுங்கையில் தற்போது வசித்தவருமாகிய குமாரு குழந்தைவேலு காலமானார் அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் கொக்குவில் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கு. விஜயரெட்ணம் (மகன்)

பிரம்படி ஒழுங்கை,
கொக்குவில்.

(25284)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி. 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 17 - 04 - 1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org